மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை (மூன்சிப் பதவி மாற்றங்களை உயர்நீதிமன்றமே செய்கிறது).

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) 23—9—1980 அன்று 2352 வழக்குகள் தீர்ப்பளிக்கப்படாமல் இருந்தன.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தென்காசி மூன்சிப் நீதி மன்றத்தில் சுமார் ஆறு மாத காலத்திற்கு நீதிபதி இல்லாமல் இருந்ததால், வழக்குகள் எல்லாம் மாற்றப்பட்டு வந்தன. அங்கேயிருந்த நீதிபதி விடுப்பு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். அவருக்குப் பதிலாக வேறு யாரையும் நியமிக்கவில்லை. இது குறித்து அந்தப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து கூட அரசுக்கு முறையீடு வந்துள்ளது. வழக்குகளைப் பதிவு செய்தவர்களிடமிருந்தும் முறையீடு வந்துள்ளது. 19—9—1980 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் இது குறித்து செய்தி வந்துள்ளது. அப்படி இருக்கும்போது, அரசுக்குச் செய்தி இல்லையென்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். ஆகவே திரும்ப பரிசீலனை செய்து பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல, ஆறு மாத காலமாக நீதிபதி அங்கு இல்லாமல் இல்லை. 11—8—1980 முதல் 4—11—1980 வரைக்கும் நீதிபதி விடுப்பில் சென்றிருந்தார். அவர் தொடர் விடுப்பில் செல்லாமல் இருந்ததாலும், மாற்று நீதிபதி ஏற்பாடு செய்ய நீதிபதிகள் இல்லாமல் இருந்த காரணத்தாலும், உயர்நீதிமன்றம் நியமிக்க வில்லை. இது குறித்து அரசே உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

Encroachment on empty site on Halls Road, Kilpauk.

* 84 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that hutments were put up by unauthorised persons on an empty site (Old Burial Ground of the Corporation) on Halls Road, Kilpauk, adjacent to Bala Vihar Home, in the second week of August, 1980 .

(*b*) whether it is also a fact that, soon after the removal of these hutments by the Police, they were once again put up by the encroachers ; and

(*c*) if so, the authority which granted the permission for the same ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ஆம். குடிசைகள் 14—8—1980 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய புலனாய்வுப் படையினரால் அகற்றப்பட்ட பின்னரும், ஆக்கிரமிப்பாளர்களால் குடிசைகள் போடப்பட்டன. ஆனால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் அலுவலர்கள் எச்சரிக்கை விடுத்த பின்னர், அவர்களாகவே குடிசைகளைப் பிரித்துக்கொண்டனர். இப்பொழுது எந்த ஆக்கிரமிப்பும் இப்பகுதியில் இல்லை.

(உ) மேற்படி ஆக்கிரமிப்பிற்கு எவரும் அனுமதி அளிக்கவில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the frequent encroachment on road margins and Government lands, may I know whether the Government will consider having a special squad attached to the Slum Clearance Board to remove these encroachments before they become permanent hutments ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆங்கிலத்தில் "ஸ்பெஷல் ஸ்குவாட்" என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத்தான் "புலனாய்வுப் படை" என்று நான் தமிழில் சொன்னேன். புலனாய்வுப் படை இருக்கிறது, அது இயங்குகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அரசுக்குச் சொந்தமான காலியிடங்களில் இதைப்போல குடிசைகள் உருவாகாமல் இருக்க இந்த இடங்களை காலியாக வைக்காமல், பூங்காக்களையும், கார் நிறுத்தும் இடங்களையும் ஏற்படுத்தும் யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கேள்வியை உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டுமென்று கருதுகிறேன்.

மண்டல மாணிக்கம் அணைக்கட்டு.

*85 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1980, ஆகஸ்டில், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பகுதியில் மண்டல மாணிக்கம் என்னும் ஊருக்கருகே உள்ள அணைக்கட்டு இடிந்து விட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) அவ்வணை எந்த ஆண்டு கட்டப்பட்டது ?

(எ) அணை கட்டுவதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?